திரு. க. உரொ. எட்மண்ட் : இந்தச் சாலை என் தொகுதி திருச்செந்தூர் தொகுதியில் உள்ள சாலை, இந்த செம்மரிகுளம்—தேரி குடியிருப்பு சாலை, நன்கு காற்று அடிக்கும்போது அந்த ரோடு மண்ணல் மூடி விடுகிறது. ஆகவே அது மக்களுக்குப் பயன்படும் வகையில் இருக்க அந்த ரோடின் உயரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்.

Houses for Revenue Officials in Salem

*736 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the State Housing Board to construct houses for the members of the Salem District Revenue Officials Association ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) குறைந்த வருமான தொகுதியினருக்காக 103 வீடுகளும் நடுத்தர வருமான தொகுதியினருக்காக 2 வீடுகளும் கட்டும் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருக்கிறது. மேற்படி வீடுகள் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டு, பல கட்டங்களில் இருக்கிறது.

தாழம்பேட்டையில் மீனவர்களுக்கு வீடுகள்.

* 737 வின— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் வட்டம், செம்பனர்கோவில் ஒன்றியம், தாழம்பேட்டையில் மீனவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திருப்பத்தூரில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை

* 738 வின— திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—